GSTN is pleased to inform that NIC is releasing the E-Way Bill 2 Portal (https://ewaybill2.gst.gov.in) on 1st June 2024. This portal ensures high availability and runs in parallel to the e-way Bill main portal (https://ewaybillgst.gov.in). The e-way bill 2 portal synchronises the e-way bill details with main portal within a few seconds. The highlights of the portal are as follows:

- Presently, E-Way Bill 2 portal provides the critical services of E-Way Bill System, and gradually it will be extended with other services of e-way bill system.
- E-Way Bills can be generated and updated on the E-Way Bill 2 Portal independently.
- E-Way Bill 2 portal provides the web and API modes of operations for e-way bill services.
- The taxpayers and logistic operators can use the E-Way Bill 2 Portal with the login credentials of the main portal.
- The taxpayers and logistic operators can use the E-Way Bill 2 portal during technical glitches in e-way bill main portal or any other exigencies.
- The Criss-Cross operations of Printing and Updating of Part-B of the E-Way bills of portal 1 can be done at portal 2 and vice versa.
- In case E-Way Bill main portal is non-operational because of technical reasons, the Part-B can be updated to the E-Way Bills, generated at Portal 1, at Portal 2 and carry both the E-Way Bill Slips

நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145, East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO, 43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



## வாகனத்துறையில்

# சோதனைகளைக் கடந்து சாதனை படைத்த பெண்

### தொழில் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உள்ள பெண்கள் / இளைஞர்களுக்கு இவரின் அனுபவம் மிகச்சிறந்த வழிகாட்டுதல்

அமெரிக்க நிறுவனமான ஜெனரல் மோட்டார்ஸின் சிஇஓ-வாக மேரி பாரா 2014ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவரது நியமனம் பெரிய அளவில் பேசப்பட்டது. காரணம், நவீன வாகனத் துறையின் 150 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் சிஇஓ அவர்தான்.

உலக அளவில் வாகனத் துறையில் தலைமை பொறுப்பு வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. விரல்விட்டு எண்ணிவிடலாம். முற்றிலும் ஆண்கள் ஆதிக்கம் மிகுந்த துறை அது. இப்படியான சவால்களுக்கு மத்தியில், ஹேமா அண்ணாமலை 2008-ம் ஆண்டு, கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஆம்பியர் மின் வாகன நிறுவனத்தைத் தொடங்கினார்.

இன்று உலகமே மின்வாகனத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன்னால் நிலைமை வேறு. மின் வாகனங்கள் மீது மக்கள் ஆர்வம் கொண்டிராத காலகட்டம் அது. இத்தகைய ஒரு சூழலில், ஆம்பியர் நிறுவனத்தை தொடங்கிய ஹேமா அண்ணாமலை, பல்வேறு தடைகளைக் கடந்து, பத்து ஆண்டுகளுக்குள்ளாக இந்தியாவில் கவனிக்கப்படும் இருசக்கர மின்வாகன தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக அதை மாற்றிக்காட்டினார்.

ஹேமா அண்ணாமலையின் ஆம்பியர் பயணம், சூரரைப் போற்று படத்தை நினைவூட்டக்கூடியது. தன்னுடைய இந்தப் பயணத்தை “தடைகளைத் தகர்த்து” என்ற நூலாக எழுதியுள்ளார். 2019-ம் ஆண்டு ஆம்பியரை, கிரீவ்ஸ் காட்டன் நிறுவனம் வாங்கியது. அதைத் தொடர்ந்து வேளான் துறையில் கவனம் செலுத்த ஆரம்பித்த ஹேமா அண்ணாமலை, 2022-ம் ஆண்டு கிரீன் காலர் அக்ரிடெக் சொல்யூசன் என்ற வேளாண் ஸ்டார்ட்அப் நிறுவனத்தை தொடங்கினார்.

தன்னுடைய ஸ்டார்ட்அப் பயணத்தில் அவர் கற்றுக்கொண்ட பாடம் என்ன?.

இவரது சொந்த ஊர் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு. அப்பா கல்லூரிப் பேராசிரியர். அம்மா பள்ளி ஆசிரியை. பணபலம் மிக்க குடும்பம் அல்ல. நடுத்தர வர்க்கம் தான். இந்த தம்பதிக்கு 6 குழந்தைகள். இதில் 5 பெண்கள். 1 ஆண். இவர் 6வது குழந்தை.

பள்ளிப் படிப்பு முடிந்து, கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் இடம் கிடைத்தது அங்கு பட்டம் பெற்று வெளியே வந்தவர், விப்ரோவில் வேலை கிடைத்தது. ஐந்து ஆண்டுகள் அங்கு வேலை பார்த்தபின், ஆஸ்திரேலியாவில் மேற்படிப்புப் படிக்க உதவித்தொகை கிடைத்தது. அந்த சமயத்தில் திருமணம் ஆகியிருந்தது. தன் கணவர் குக் கிராமத்தில் இருந்து வந்தவர். தொழில்முனைவில் மிகத் திறமைமிக்கவர். அவர் வழியாகவே, தொழில்முனைவு சிந்தனை பெருகியதாக இவர் தெரிவிக்கிறார்.

2000-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சின்னச் சின்னதாக ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கி நடத்த ஆரம்பித்துள்ளார். அவை அனைத்தும் சேவைத் துறை சார்ந்தவை.

ஒருமுறை ஜப்பானில் வாகனத் துறை சார்ந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தன் கணவருடன் கலந்து கொண்டார். அப்போது டொயோட்டா நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் உரையாற்றுகையில், ஐசி இன்ஜினின் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. இனி மின் வாகனங்கள்தான் உலகில் புழங்கப்போகின்றன என்றார்.

அவரது உரை தனக்கு பெரும் திருப்பமாக அமைந்துள்ளது. அதுவரையில் மென்பொருள் துறையில் புழங்கிவந்த தனக்கு, அவரது உரையைக் கேட்டப் பிறகு, மின்வாகனம் சார்ந்து செயல்பட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.

அது குறித்து தொடர்ந்து படிக்க ஆரம்பித்துள்ளார். அந்த சமயத்தில், ஏனைய நாடுகள் மின் வாகனத் தயாரிப்பில் முன்னால் சென்று கொண்டிருந்தன. இந்தியா தொடக்க நிலையில் இருந்தது. மிகக் குறைந்த விலையில், உள்ளூர் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் இருசக்கர மின்வாகனத்தை உருவாக்குவோம் என்று முடிவு செய்தார். தன் கணவர் மின்னணு பொறியாளர். அவருடைய வழிகாட்டுதல் தனக்கு உதவியாக இருந்துள்ளது. இப்படித்தான் இவரின் ஆம்பியர் பயணம் தொடங்கியுள்ளது.

ஆரம்பத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்டுவந்த முன்னணி பிராண்ட் பேட்டரியை தங்கள் மின் வாகனங்களில் பயன்படுத்தி வந்துள்ளனர்.

அந்தப் பேட்டரிகளின் செயல்திறன் 6 மாதங்களிலேயே குறைய ஆரம்பித்தது. மின் வாகனங்களுக்கு அடிப்படையே பேட்டரிதான். அதுவே பழுதடைகிறதென்றால், நிறுவனம் மீது வாடிக்கையாளர்கள் நம்பிக்கை இழக்க ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் இவரின் வாகன விற்பனை கேள்விக்குறியானது. பல விநியோகஸ்தர்களை இழந்துள்ளனர்.

இந்த சமயத்தில் தன் கணவர் உறுதுணையாக இருந்துள்ளார். புதிய பேட்டரிகளை வாங்கி அவற்றை வண்டியில் ஏற்றிக்கொண்டு, ஒவ்வொரு விநியோகஸ்தர்களையும் தேடிப் போய், பழைய பேட்டரிகளுக்குப் பதிலாக புதிய பேட்டரிகளை மாற்றிக் கொடுத்துள்ளனர். இதனால், விநியோகஸ்தர்களின் நம்பிக்கை மீட்கப்பட்டது.

அதே போல, தமிழ்நாட்டில் நாளொன்றுக்கு 16 மணி நேரம் மின் தடை நிலவிய சமயத்தில் பெரும் சிரமத்தை சந்தித்ததாகத் தெரிவிக்கிறார். மின்சாரம் இல்லையென்றால், யார் மின்வாகனம் வாங்குவார்கள். எப்படியோ, அந்தச் சூழலையும் சமாளித்து எழுந்துள்ளனர்.

அடுத்ததாக, நிதி நெருக்கடி இவருக்கு மிகப்பெரிய சோதனையாக அமைந்தது. ஒரு வெளிநாட்டு நிறுவனம், தங்களுக்கு வழங்கிய முதலீட்டை திரும்பக் கோரியுள்ளது.

இந்தச் சூழலில், மத்திய அரசு மாற்று எரிசக்தி கட்டமைப்பை ஊக்குவிக்க வழங்கி வந்த மானியத்தை திடீரென்று நிறுத்தியது.

இதனால், மிகுந்த நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார். ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூட பணம் இல்லை. கடன் கழுத்தை நெரிக்கும் சூழல். நிறுனத்தை மூடிவிட்டு செல்வது தான் ஒரே தீர்வு என்று பலர் கூற, நிறுவனத்தை மூடக்கூடாது என்பதில் தாம் மிகவும் உறுதியாக இருந்துள்ளார்.

"என் வாழ்நாள் சம்பாத்தியம், சொத்து, நகை என என்னிடம் இருந்த அனைத்தையும் இந்த நிறுவனத்துக்காக போட்டிருக்கிறேன். இந்த நிறுவனத்தை கைவிட்டுவிட்டால் எங்கள் உழைப்பு அனைத்தும் வீணாகிவிடும். நான் இறை நம்பிக்கை உடையவள். இந்த மாதிரியான சமயத்தில் நான் இறைவனிடம் தஞ்சம் அடைந்துவிடுவேன். என்று கூறியவர்".

சீக்கிரமே, நிலைமை மாறியது. இறைவன் ஒரு வழியைக் காட்டினார். அவர்தான் ரத்தன் டாட்டா.

ரத்தன் டாட்டா ஒரு நிகழ்ச்சிக்காக கோயம்புத்தூர் வருவதாக கேள்விப்பட, எப்படியாவது அவரைச் சந்தித்து, ஆம்பியர் நிறுவனத்தைப் பற்றி எடுத்துச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

இணையத்தில் டாட்டா நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி இருந்தது. அதற்கு ஒரு மின்னஞ்சல் செய்தார். அதை ரத்தன் டாட்டா பார்ப்பாரா இல்லையா என்பதெல்லாம் தெரியாது. ஒரு நம்பிக்கையில் அனுப்பியுள்ளார்.

அதன் பிறகு, ரத்தன் டாட்டாவின் உதவியாளர் நம்பரை தேடிப்பிடித்துள்ளார். அவர் கூறியதாவது, "ஹேமா, உங்களுடைய மின்னஞ்சல் எங்களுக்குக் கிடைத்தது. டாடா விரைவில் பதிலளிப்பார்". என்றார். அது தமக்கு பெரும் நம்பிக்கை அளித்துள்ளது.

அவர் சொன்னது போலவே, பதில் வந்தது. "டிசம்பர் மாதம் டாட்டா அவர்கள் கோவை வருகிறார். அவருடனான சந்திப்புக்கு 10 நிமிடம் உங்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். 10 நிமிடத்துக்குள் அவரிடம் நிறுனத்தைப் பற்றி விளக்கிவிட வேண்டும். என்று".

உடனே, தங்கள் நிறுவனத் தயாரிப்பை யாரெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பவற்றை புகைப்பட ஆல்பமாக எடுத்து சென்றுள்ளார். டாட்டா அவற்றை ஆர்வமாக பார்வையிட்டார். "சார் எங்கள் தயாரிப்பை நீங்கள் நேரில் பார்வையிட முடியுமா" என்று கேட்க, அவர், "எனக்கு இப்போது வேறொரு சந்திப்பு இருக்கிறது. அதன் பிறகு கொஞ்சம் நேரம் கிடைக்கும். நீங்கள் காத்திருக்கத் தயார் என்றால் நாம் பார்க்கலாம்" என்றார். சந்திப்பு முடிந்து வந்தார். தான் கொண்டு வந்திருந்த ஆம்பியர் மின் வாகனங்களைப் பார்வையிட்டார். அது அவருக்கு மிகவும் பிடித்தது.

டாட்டா அவர்கள், "ஹேமா, எங்கள் அலுவலகத்திலிருந்து உங்களைத் தொடர்பு கொள்வார்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

அடுத்த ஓரிரு மாதங்களில் ரத்தன் டாட்டா அவர்கள் முதலீடு செய்தார். அந்த செய்தி வெளியான பிறகு, ஆம்பியர் நிறுவனம் இந்திய அளவில் கவனம் பெற்றது. இன்போசிஸ் கிருஷ் கோபாலகிருஷ்ணனும் முதலீடு செய்தார். அதன்பிறகு ஆம்பியர் வேகமாக வளர்ச்சி காண ஆரம்பித்தது.

அனைத்து தொழில் முனைவோரிடத்திலும் இவர் கூறுவது, உங்கள் நிறுவனத்தின் பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கை 5 சதவீதம் இருந்தால், அதை 30 சதவீதமாகவும், 50 சதவீதம் என்றால் அதை 80 சதவீதமாகவும் மாற்றுங்கள். உங்கள் நிறுவனம் வெற்றிபெறும் என்கிறார்.



அதோடு, நாம் இப்போது இருக்கும் நெருக்கடிச் சூழலை மனதில் வைத்து எதிர்காலமும் அப்படித்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வரக்கூடாது என்பதை இந்தப் பயணத்தில் ஆழமாக உணர்கிறேன் என்கிறார்.

மிகவும் நெருக்கடியான தருணங்களில், கண்ணை மூடி 15 நிமிடங்கள் அமைதியாக இருந்தால் போதும், பாதை புலப்படும்.

நாம் குழப்பமும், எதிர்மறையான சூழலும் நிலவும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தக் காலகட்டத்தில், நம் பாதையில் கவனம் சிதறாது, சந்தையில் தெளிவுடன் பயணிக்க வேண்டுமென்றால் யோகாவும், தியானமும் அவசியம் என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்துள்ளேன். அவற்றை செய்யும்போது, நான் பிரபஞ்சத்துடன் ஒன்றுகிறேன். என் மூச்சு சீராகிறது. என்னுள் பெரும் ஆற்றல் ஊற்றெடுக்கிறது.

குடும்பத்தில் இணக்கமானச் சூழலை உருவாக்குவது அவசியம். குடும்பத்தில் பிரச்சினை இருந்தால், வேலையில் நம்மால் முழுமையாக கவனம் செலுத்த முடியாது. எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒருங்கிணைய வேண்டும். அப்படி ஒருங்கிணையும்போது, வாழ்க்கையில் நாம் எதையும் சாதிக்கலாம் என்று இந்து தமிழ் நாளிதழுக்கு அளித்து பேட்டி ஒன்றில் திருமதி. ஹேமா அண்ணாமலை அவர்கள் கூறியுள்ளார்.



*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for



**K.K.Dinakaran**
Chairman & Director

Godrej – Chemical Division

IFF – Perfumes & Fragranaces

INDORAMA – Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products

Micro Sol – PERFECT CLEANING FOR FUTURE LIFE



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products









Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

**Branches** | Chennai | Madurai | Hyderabad | Bangalore

# பழச்சாறுகளின் லேபிள் மற்றும் விளம்பரத்திலிருந்து 100% பழச்சாறு என்ற கூற்றை அகற்ற FSSAI உத்தரவு

மறுசீரமைக்கப்பட்ட பழச்சாறுகளின் லேபிள்கள் மற்றும் விளம்பரங்களில் இருந்து "100% பழச்சாறு" (100% Fruit Juices) குறித்த கூற்றை உடனடியாக அகற்றுமாறு அனைத்து உணவு வணிக இயக்குநர்களுக்கு (FBO) இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் FSSAI உத்தரவு பிறப்பித்துள்ளது.

அனைத்து FBO-க்களும் ஏற்கனவே புழக்கத்தில் உள்ள முன் அச்சிடப்பட்ட அனைத்து பேக்கேஜிங் பொருட்களையும் செப்டம்பர் 1, 2024க்கு முன் தீர்த்துவிடும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பல FBO-க்கள் "100% பழச்சாறு" என்று கூறி பல்வேறு வகையான மறுசீரமைக்கப்பட்ட பழச்சாறுகளை தவறாக சந்தைப்படுத்தி வருவது FSSAI-ன் கவனத்திற்கு வந்துள்ளது. முழுமையான பரிசோதனைக்குப் பின்னர், FSSAI உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (விளம்பரம் மற்றும் உரிமைகோரல்கள்) விதிமுறைகள் 2018ன் படி, 100% உரிமைகோரல் ஏற்புடையது அல்ல என்று முடிவு செய்துள்ளது. இத்தகைய கூற்றுக்கள் தவறாக வழிநடத்துகின்றன.

மறுசீரமைக்கப்பட்ட பழச்சாறுகளை 100% பழச்சாறு என்று சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட தெளிவுபடுத்தலில், உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (உணவு தயாரிப்புகள் தரநிலைகள் மற்றும் உணவு சேர்க்கைகள்) ஒழுங்குமுறை, 2011-ன் துணை ஒழுங்குமுறை 2.3.6-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பழச்சாறுகளுக்கான தரநிலைகளுக்கு இணங்க வேண்டும் என்று FBO-க்கள் நினைவூட்டப்படுகின்றன.

இந்தத் தரநிலைகள் (லேபிளிங் மற்றும் காட்சி) விதிமுறைகள், 2020ன் படி லேபிளிடப்பட வேண்டும் என்று இந்த ஒழுங்குமுறை கூறுகிறது.

குறிப்பாக, மூலப்பொருள் பட்டியலில், செறிவிலிருந்து மறுசீரமைக்கப்பட்ட சாறின் பெயருக்கு எதிராக "மறுசீரமைக்கப்பட்ட" (reconstituted) என்ற சொல் குறிப்பிடப்பட வேண்டும். கூடுதலாக, சேர்க்கப்பட்ட ஊட்டச்சத்து இனிப்புகள் 15 கிராம் / கிலோவுக்கு மேல் இருந்தால், அந்தத் தயாரிப்பு "இனிப்புச் சாறு" (Sweetened Juice) என்று பெயரிடப்பட வேண்டும்.

## கோரிக்கை - மறுபரிசீலனை - மத்திய நிதியமைச்சர்

MSME நிறுவனங்கள் வாயிலாக சரக்குகள் மற்றும் சேவைகளைப் பெற்ற பெரிய நிறுவனங்கள், அதற்காக வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை, 45 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என வருமான வரி சட்டத்தின் புதிய திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்திருத்தத்தால் தங்களுக்கு கிடைக்க வேண்டிய புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக MSME தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், அரசு இது குறித்து மறுபரிசீலனை செய்து, ஜுலை மாதம் தாக்கல் செய்ய உள்ள பட்ஜெட்-ல் அறிவிப்பு வெளியிடும் என்று கூறியுள்ளார்.

## ஜி.எஸ்.டி., - 12% பிரிவை நீக்க பரிசீலனை

தற்போது நாடு முழுவதும் 1200க்கும் மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு ஜி.எஸ்.டி., வரி விதிக்கப்பட்டு வருகிறது.

ஜி.எஸ்.டி., வரியில் 4 விதமான பிரிவுகள் உள்ளன. 5 %, 12%, 18%, 28% ஆகிய 4 பிரிவுகளில் ஜி.எஸ்.டி வரிவிதிக்கப்படுகிறது. இது போக சிறப்பு பிரிவாக சில பொருட்களுக்கு 0.25%, 1.5%, 3% வரியும் விதிக்கப்பட்டு வருகிறது. சில பொருட்களுக்கு மட்டும் ஜி.எஸ்.டி வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஜி.எஸ்.டி, வரி விதிப்பை மறு சீரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக மத்திய மற்றும் மாநில அதிகாரிகள் அடங்கிய குழு, ஜி.எஸ்.டி, விகிதங்களை மாற்றியமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக 12% வரி விதிக்கும் பிரிவை நீக்கவிட்டு அந்த வரியை குறைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த வரியை மறுசீரமைப்பதற்கான அறிக்கையை தயாரித்து அதை ஜி.எஸ்.டி கவுன்சிலில் உள்ள மந்திரிகள் குழுவிடம் சமர்ப்பிக்க உள்ளனர்.

அதன் அடிப்படையில் 12% வரிவிதிப்பு நீக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட வரி விகிதங்கள் இந்த நிதியாண்டிலேயே அமல்படுத்தப்படும் என்று வருவாய்த்துறை எதிர்பார்க்கிறது.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:- மத்தியில் புதிய ஆட்சி அமைந்த பிறகு ஜுலை மாதம் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். அதன்பிறகு ஜி.எஸ்.டி., கவுன்சில் கூடி இது தொடர்பாக விவாதிக்க வாய்ப்புள்ளது. அதில் பல பொருட்களுக்கான ஜி.எஸ்.டி வரி மாற்றி அமைக்கப்படும். அதன்பிறகு 12% வரி பிரிவு நீக்கப்பட வாய்ப்பு உள்ளது என்றார்.

## ஆதார் மூலம் ஜி.எஸ்.டி., பதிவு

ஆதார் மூலம் சரக்கு மற்றும் சேவை வரி பதிவை மேற்கொள்ள தமிழகம் உள்பட 5 மாநிலங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

விரல்ரேகை, கருவிழிப்படல பதிவு மூலம் ஜி.எஸ்.டி பதிவு மேற்கொள்வது குறித்து சென்ற மே மாதம் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடைமுறை, ஆந்திரம் மற்றும் குஜராத் ஆகிய இரு மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தமிழகம், கர்நாடகம், தெலுங்கானா உள்பட 5 மாநிலங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மாநில அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு ஆதார் மூலம் ஜி.எஸ்.டி பதிவை மேற்கொள்ளும் நடைமுறை அமல்படுத்தப்படும்.

பல்வேறு முறைகேடுகள் நிகழ்வதைத் தடுக்க, விரல்ரேகை, கருவிழிப்படப் பதிவுகளைக் கொண்டு ஜி.எஸ்.டி பதிவை மேற்கொள்ள மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க ஆணையம் முடிவு செய்துள்ளது குறிப்பிடத்துக்கது.

**தகவல்**

எடை மற்றும் அளவிடும் கருவிகளுக்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி ஒப்புதல் சான்றிதழை (Pattern Approval Certificate) வழங்க அங்கீகரிக்கப்பட்ட உலகின் 13 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். சர்வதேச சந்தையில் எடை மற்றும் அளவிடும் கருவிகளை விற்பனை செய்வதற்கு இந்த சான்றிதழ்கள் கட்டாயமாகும்.


VH
வேதவல்லி ஹாலிடேஸ்
காமராஜர் சாலை, மதுரை
99430 31237
www.vedhavalliholidays.com
DOMESTIC
Lakshadweep
Kashmir
Kullu Manali
Andaman
Shimla
Goa
INTERNATIONAL
Bali
Phuket
Mauritius
Maldives
Swiss Paris
Seychelles
Special
Honeymoon
PACKAGES
BOOK NOW

# SITCON'24 - SOUVENIR ADVT. TARIFF

| | |
|---|---|
| Back 1st Wrapper Back Outer | Rs. 30,000 |
| Back 1st Wrapper Inner | Rs. 25,000 |
| Front 1st Wrapper Inner | Rs. 25,000 |
| Inner Prime Front | Rs. 15,000 |
| Inner Prime Back | Rs. 15,000 |
| Inner Full Page (Size : 9" x 7") | Rs. 6,000 |
| Inner Half Page (Size : 4.25"x7") | Rs. 3,000 |
| Logo 2x2 | Rs. 1,500 |
| Advt. & Profile (2 Page) | Rs. 10,000 |
| Book Size : 11" x 8.5" | |

(fully Multi Colour)

Contact for Souvenir
**S.M.Karthik Kumaran**
Mobile : 94438 31496

# SITCON Expo-2024

**Aug. 09, 10 & 11** (Friday, Saturday & Sunday)

**Ground Floor A/C Stalls**
Stall No. 01 to 28
@ Just Rs.22000/-

**First Floor Non A/C Stalls**
Stall No. 29 to 59
@ Just Rs.15000/-

**Under Ground A/C Stalls**
Stall No. 60 to 83
@ Just Rs.22000/-

**For Premium & Platinum Stalls**
Contact :
94430 20170 & 93441 52068

# மருத்துவ தகவல்

கேள்வி: எனக்கு வலது முழங்கால் வலி உள்ளது. மூட்டு வீங்குகிறது மற்றும் நடக்கவும் இயலாமல் இருக்கிறது. மூட்டு தேய்மானம் இருப்பதாக மருத்துவர் கூறியுள்ளார். மூட்டினில் உள்ள நீரை ஊசி போட்டு எடுத்தால் வலி சற்று நிவாரணம் கிடைக்கிறது. இதுவரை இரண்டு முறை மூட்டு நீர் எடுக்கப்பட்டுள்ளது. முதலில் கிடைத்த அளவு வலி நிவாரணம் இரண்டு முறை கிடைக்கவில்லை மீண்டும் இவ்வாறு மூட்டு நீர் எடுக்கலாமா?.

பதில்: மூட்டு தேய்மானம் உள்ளவர்களுக்கு மூட்டின் உறையில் நீர் அதிகமாக சுரப்பதால் மூட்டு நீர் உண்டாகிறது. மூட்டு நீரை அகற்றும் போது வீக்கம் குறைவதால் மூட்டினில் வலி தற்காலிகமாக குறைகிறது. இந்த சிகிச்சையில் அடிப்படை பிரச்சனையான மூட்டு தேய்மானத்தை எந்த விகிதத்திலும் முன்னேற்றம் செய்யாது. ஆதலால் இப்படிப்பட்ட சிகிச்சை நோயின் தன்மையை கண்டறிவதற்கு தவிர மற்றபடி நிவாரணம் அளிக்கும் என்னும் நோக்கத்தோடு அடிக்கடி தருவது தவறாகும்.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & சேல் சிறப்பு எழும்பியல் மையம்

## For SITCON Stall & Souvenir Payment Bank Details

All payment by Cheque / DD / NEFT / RTGS or Demant Draft in favour of **SITCON**

**State Bank of India**
Branch : **SME Branch**
A/c No. : **38502195088**
IFSC : **SBIN0000988**

(or)

**Scan & Pay**




• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

Prop.: B.S. Rajan

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

Your Name is Your Life

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட'
முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



**MANTHRALAYAM** 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
**98421 11411**



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**




நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
JSW Steel
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in



நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj
RIGID PVC PIPES,FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...
Architect's First Choice
Architects Suggest ...
The right way to sensible plumbing
Specialy Made for Borewells
Specialy Made for Watersupply
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



MAYFLOWER
The Banquet Hall A/c
For Booking
94439 30728
86100 06493
92442 31583
161F, Salai Pillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625009



VIGNESH GRAPHICS
All Kinds of Printing Solution
★ Brouchers
★ Wedding Cards
★ Souvenirs & Directories
★ Visiting Cards
Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.
Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.
Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.
O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com
★ Letter Pads
★ Shopping Bags
★ Paper Bags
★ Menu Cards

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.06.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

UG CHEMI JAGSAN

U G கெமி ஜாக்சன்



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



வேல் மருத்துவமனை

வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service





சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

அவோ! மிளோ!! ஹொடோ!!!

# SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2024

## வர்த்தகக் கண்காட்சி

தேதி : ஆகஸ்ட் 9, 10 &11, 2024
நாள் : வெள்ளி, சனி ஞாயிறு
இடம் : மடீட்சியா அரங்கம்,
மதுரை மாநகராட்சி அருகில், மதுரை.
காலை 9.30 மணி முதல்
இரவு 9.00 மணி வரை

## மாநாடு நிகழ்ச்சிகள்

ஆகஸ்ட் 14 & 15, 2024 புதன், வியாழன்
தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்
ஹட்சன் ஹால் A/c, காமராஜர் சாலை, மதுரை
புதன் மாலை 5 மணி முதல் இரவு 9.00 மணி வரை
வியாழன் காலை 9.30 மணி முதல்
இரவு 9.00 மணி வரை

## Madurai RUN 2024

ஆகஸ்ட் 11, ஞாயிறு, காலை 6மணி,
காந்தி மியூசியம்,
மதுரை

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
161F, Salai Pillaiyar Koil Street, Kamarajar Salai,
Madurai - 625009. Cell: 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org